STC.No.156/2024 **PW1. திருமதி. ஜெயபிரபா**

தேதி– 27.10.2025

எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வயது 42 ஆகும். நான் விவசாயம் செய்கிறேன். மாட்டு பண்ணை வைத்துள்ளேன். எனது கணவருடன் தொழில் செய்கிறேன். நான் எனது கணவருடன் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் கோம்பையாகும். திருமணம் ஆகி 31 வருடம் ஆகிறது. எதிரிக்கு எப்போது திருமணம் ஆனது என்பதை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனது சின்னம்மா மூலம் எதிரியை தெரியும், எதிரிக்கு 1 ஆண் மற்றும் 1 பெண் குழந்தை உள்ளது. எதிரி என்ன வேலை செய்கிறார் என்ற விபரம் தெரியாது என்றால் எதிரி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று தற்போது செக்யூரிட்டியாக பணிபுரிந்து வருகிறார். எதிரி எப்போது ஓய்வு பெற்றார் என்றும், எப்போது வேலையில் சேர்ந்தார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

2. எனக்கும், எதிரிக்கும் உள்ள பழக்க வழக்கம் குறித்து எனது கணவருக்கு தெரியும் என்றால் சரிதான். எனது சின்னம்மாவுடன் வீட்டிற்கு வருவார். காளிராஜ் என்பவர் எனது சித்தப்பா முறை என்றால் சரிதான். நான் பிரமலை கள்ளர் சமுதாயம், எதிரி நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது சித்தப்பா காளிராஜ் எதிரியின் மீது உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் OS 581/2023 என வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. நான் கோம்பை விட்டு சென்றபின்பு எப்போது கோம்பைக்கு வருவேன் என்றால் நல்லது, கெட்டதற்கு வருவேன்.

3. எதிரி எதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் குடும்ப செலவிற்காக கேட்டார். என்ன குடும்ப செலவு என்று தெரியுமா என்றால் தெரியாது. வரவு செலவு முழுவதும் எனது சின்னம்மா காளிராஜின் மனைவி நாகம்மாளுக்கு தெரியும் என்றால் சரிதான். 17.04.2024 க்குள் வங்கியின் மூலமாக பெணம் திருப்பி கொடுப்பதாக எதிரி கூறினாரா என்றால் சரிதான். 17.04.2024 அன்று எடுத்து கொள்ளும் படி காசோலை கொடுத்தாரா என்றால் 17.04.2024

க்குள் எடுத்துக்கொலள்ளும்படி கூறினார். நான் 18.04.2024ம் தேதியன்று காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். 17.04.2024ம் தேதியன்று எதற்காக காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அன்று எனது வீட்டில் விசேசம் இருந்தததது. எதிரி SBI வங்கி, உத்தமபாளையத்தில் கணக்கு வைத்துள்ளார். வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் எதிரிக்கு அனுப்பினேன் என்றால் தெரியாது.

4. எனது வழக்கறிஞரின் பெயர் M.S. முத்துக்குமரன் என்றால் சரிதான். உண்மையில் எதிரி எனக்கு காசோலை கொடுக்கவில்லை என்றும் எனது சித்தப்பா காளிராசுக்கு தான் காசோலை கொடுத்தார் என்று கூறி எதிரி பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் என்னை தெரியாது என்றும், எனக்கும் எதிரிக்கும் எவ்வித அறிமுகமும் இல்லை என்று கூறி குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா காளிராஜ் என்ற காளிராஜ் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்கிறார் என்றால் கைமாற்றாக கொடுப்பார், வட்டி தொழில் செய்யவில்லை. 23.03.2022ம் தேதியன்று எனது சித்தப்பாவிடம் எதிரி ரூ.1 லட்சம் கடன் கேட்டார் என்றும், அதற்கு ஆதரவாக பூர்த்தி செய்யாத புரோநோட்டுகள் –2, தாவா காசோலை மற்றும் வேறு ஒரு காசோலை எதிரி எனது சித்தப்பாவிற்கு கொடுத்தார் என்றால் தெரியாது.

5. மேற்படி விபரங்களை எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் கூறியுள்ளார் என்றால் தெரியாது. எதிரி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று விவசாயம் செய்வதில் கடன் பட்டு கடன்காரர்களுக்கு பயந்து கடந்த 26.06.2023ம் தேதியன்று கோம்பையை விட்டு கோப்பிசெட்டிபாளையத்திற்கு சென்று விட்டார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் 18.02.2024ம் தேதியன்று எதிரி கோம்பைக்கோ எனது ஊருக்கு வந்து பணம் பெறவில்லை என்றால் வெள்ளையம்மாள்புரத்திற்கு எதிரி வந்து பணம் வாங்கி சென்றார். நான் சொன்னதுபோல் எதிரி வெள்ளையம்மாள்புரத்திற்கு வரவில்லை என்றும், பணம் பெறவில்லை என்றும், காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 18.04.2024ம் தேதியன்று எதிரிக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த விபரம் மற்றும் காசோலை திருப்பப்பட்டவிபரம் தெரியாது என்றால் சரியல்ல.

6. எனது சித்தப்பாவிடம் எதிரி கொடுத்த காசோலையை வைத்து எனது சித்தப்பா என்மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் எனது சித்தப்பா தாக்கல் செய்த வழக்கில் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் தாவா காசோலையை குறித்து குறிப்பிட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும், எனக்கும் தனிப்பட்ட பழக்கம்

இல்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா மற்றும் சித்தியிடம் எதிரி வாங்கிய ரூ.1 லட்சம் தொகைக்கு அவர் மீது உரிமையியல் வழக்கு மற்றும் காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமான விபரங்கள் எனது சித்திக்குதான் தெரியும் என்றால் சரிதான். அதனால் எனது சித்தியை விசாரிக்க தயாரா என்றால் தயார். எதிரி என்னை நம்பிக்கை மோசடி செய்யவில்லை என்றும், அதனால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதிரி எனது ஊருக்கு வரவில்லை என்றும், கோபி செட்டிபாளையம் வட்டார போக்குவரத்து கழகத்தில் இரவு காவலராக எதிரி பணிபுரிந்தார் என்றும், அதற்கான ஆவணம் எதிரி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2025.09.01 14:07:44 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam